**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**O.S. No.181/2022**

**07.03.2025**

**P.W.1- பஞ்சவர்ணம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் அம்மாவின் சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள், ஆகையால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.தாவா சொத்தின் சர்வே எண்.177/1ஏ2 ஆகும். 1ம் பிரதிவாதி 30.12.1994ம் தேதி ஒத்திப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அது தவறு. அந்த பத்திரம் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து தேனப்பனுக்கு பூர்வீக பாத்தியம் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காளியம்மாள் சந்தானத்தின் மனைவி என்றால் சரிதான். காளியம்மாளும், 2ம் பிரதிவாதியும் உடன்பிறந்தவர்கள் என்றால் உடன் பிறந்தவர்கள் அல்ல, ஆனால் சகோதரிகள். தேனப்பனும், சந்தானமும் மலேசியா சென்றபோது தாவா சொத்தை 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டு வாக்கரலாக விடுதலை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 12.01.1998ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் லட்சம்தேவருக்கு ஒத்தி எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. செல்லம் என்பவர் பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். மேற்படி செல்லம் தாவா சொத்தை கிரையம் பெற்றதாக கூறி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.19/1998 என வழக்கு தாக்கல் செய்து வழக்கு தள்ளுபடி ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.19/1998 வழக்கிற்கு மேல்முறையீடாக மே.மு.72/2001 வழக்கும், இரண்டாவது மே.மு.884/2011 வழக்கும் நடந்த விவரம் தெரியாது. நான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, தண்ணீர் பாசண வசதி இல்லாததால் தரிசாக உள்ளது. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கான பதிவு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அம்மாவின் பெயரிலுள்ள பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2000ம் வருடத்தில் எனது தாயார் இறந்த பிறகு எனது தாயார் பெயரிலுள்ள வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேனப்பன் மற்றும் சந்தானத்தின் இறப்பு, வாரிசு சான்றுகள்



தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேனப்பன் மற்றும் சந்தானத்தின் இறப்பு, வாரிசு சான்றுகள் இல்லை. அவர்கள் மலேசியாவில் இறந்துவிட்டதால் ஆவணங்கள் இல்லை. நான் வா.சா.ஆ.2 சிட்டா ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எந்த வருடம் வழங்கப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் எனது தாத்தா காலத்திலேயே உள்ளதாகும். மேற்படி ஆவணத்தை 22.07.2022ல் தான் நகல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண்.257 1ம் பிரதிவாதி பெயரிலுள்ளது தெரியுமா என்றால் அது தவறான பட்டாவாகும். வா.சா.ஆ.2

ஆவணத்தில் தேனப்பன் பூசாரி என்றும், வா.சா.ஆ.3 ஆவணத்தில் தேனப்பன் என உள்ளது என்றால் சரிதான். இருவரும் ஒரே நபர் தான். வா.சா.ஆ.3 எனது அம்மாவின் இறப்பு சான்றிதழில் இஞ்சிப்பாறை விலாசம் உள்ளது என்றால் நான் அங்கு இருக்கும்போது எனது அம்மா இறந்ததால் அந்த விலாசம் உள்ளது. மேற்படி இறப்பு சான்றிதழ் 2000ம் வருடம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது அம்மாவின் வாரிசு சான்றிதழ் 2009ல் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் வால்பாறை வட்டாட்சியர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் இஞ்சிப்பாறையில் குடியிருந்ததால் அந்த விலாசத்தில் விசாரித்து வழங்கினார். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது விலாசம் தேனி என உள்ளது என்றால் நான் 2007ல் தேனிக்கு வந்ததால் அந்த விலாசம் உள்ளது. முத்துமாலையின் வாரிசுகள் தற்போது வெவ்வேறு மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் திருமணமாகி சென்றுவிட்டார்கள். யாரும் தாவா சொத்திற்கு அருகில் இல்லை என்றால் எனது மூத்த தங்கை செல்வராணி அருகில் உள்ளார். வா.சா.ஆ.4ல் மூத்த தங்கை செல்வராணியின் விலாசம் பொள்ளாச்சி என்றால் சரிதான். பொள்ளாச்சியில் வேலை பார்த்ததால் அங்கு உள்ளது. பூர்வீகம் கருமாத்தூர் கிராமம் ஆகும். அவ்வாறு கருமாத்தூரில் வசித்து வருவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்துமாலை இஞ்சிப்பாறையில் தான் பூர்வீகமாக வசித்து வந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் தேனி மாவட்டம், அல்லிநகரத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். வா.சா.ஆ.6 ஒத்திப்பத்திரம் 22.08.2022ல் தான் நகல் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒத்திப்பத்திரத்தின் படி



ஜெயசந்திரன் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் அது தவறாகும். வா.சா.ஆ.7 தான செட்டில்மென்ட் ஆவணம் 22.08.2022ல் நகல் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறான பட்டாவாகும். மேற்படி பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்பதால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் 22.08.2022ல் நகல் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் மங்குத்தாய், செல்வராணிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் 3ம் பிரதிவாதி, சீனிவாசனுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அ.வ..350-2019 என வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் கண்ட பிரதிவாதிகளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றாலும், பூர்வீகமாக தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லையென்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தை 4ம்

பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் அனுபவம் செய்யவில்லை, ஆனால் 3 மாதங்களுக்கு முன்பாக கட்டிடம் கட்டி கொண்டு இருக்கிறார். 4ம் பிரதிவாதி கட்டிடம் கட்டி, மின் இணைப்பு பெற்று தனித்த அனுபவத்தில் கிரையம் பெற்ற காலம் முதல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி கட்டிடம் பற்றி சொல்லவில்லை என்றால் நிரூபண வாக்குமூலம் தயார் செய்தபின்பு தான் கட்டிடம் கட்டினார். நான் தேனப்பனின் வாரிசு வழி வந்தவர் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.